நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்

திரு. சா. வரதராஜன், பி.ஏ., பி.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.

**<u>பிரிவு 313(1)(ஆ) CrPC –இன் படியான விசாரணை</u>**

எதிரிகள் :

1. தமிழரசன்
2. எபினேசர்

| | | | |
|---|---|---|---|
| 1 | கேள்வி | : | அ.சா.1 – மாரியப்பன் அவருடைய சாட்சியத்தில் சுமார் 2 ½ ஆண்டுகளுக்கு முன்னர் காலை வேளையில் அ.சா.1–ன் ஊரில் உள்ள காளியம்மன் கோவில் அருகே வைத்து எதிரிகளாகிய நீங்கள் இருவரும் கையால் அ.சா.1–மாரியப்பனை தாக்கியதாகவும், சம்பவம் தொடர்பாக வெம்பக்கோட்டை காவல்நிலையத்தில் அ.சா.1 புகார் மனு அளித்தாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1 வது எதிரி : பொய் வழக்கு<br>2 வது எதிரி : பொய் வழக்கு |
| 2 | கேள்வி | : | அ.சா.2–திரு.பால்ராஜ் சிறப்பு சார்பு ஆய்வாளர் அவருடைய சாட்சியத்தில் 15.06.2022 ம் தேதி வெம்பக்கோட்டை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.வெற்றிமுருகன் நிலைய பொறுப்பில் இருந்த போது நிலையத்தில் உள்ள நிலுவை மனுக்களை பார்வையிட்டு நிலைய இரண்டாம் நிலை பெண் காவலர் திருமதி.திவ்யா என்பவரால் பதிவு செய்யப்பட்ட மனு ரசீது எண்.145/2022 ஐ பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டதில் மேற்படி மனுவில் உள்ள சம்பவங்கள் பிடிக்கக்கூடிய சம்பவமாக நிகழ்ந்திருப்பதல் புகார் மனுவின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 201/2022 பிரிவுகள் 294(b), 323, 506(2) இ.த.ச –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1 வது எதிரி : பொய் வழக்கு<br>2 வது எதிரி : பொய் வழக்கு |
| 3 | கேள்வி | : | அ.சா.2–மேலும் அவருடைய சாட்சியத்தில், சார்பு ஆய்வாளர் திரு.வெற்றிமுருகன் 18.06.2022 ம் தேதி 1.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கருப்பசாமி மற்றும் பால்பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1 வது எதிரி : பொய்<br>2 வது எதிரி : பொய் |
| 4 | கேள்வி | : | அ.சா.2– மேலும் அவருடைய சாட்சியத்தில், சார்பு ஆய்வாளர் திரு.வெற்றிமுருகன் திரு.வெற்றிமுருகன் சாட்சிகள் மாரியப்பன், முருகன், ஆனந்த், சோபனா, வனிதா, சின்னபிரகாஷ், திவ்யா, ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாக |

| | | | |
|---|---|---|---|
| | | | சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1 வது எதிரி : பொய்<br>2 வது எதிரி : பொய் |
| 5 | கேள்வி | : | அ.சா.2 மேலும் அவருடைய சாட்சியத்தில், சார்பு ஆய்வாளர் திரு.வெற்றிமுருகன் பின்னர் தனது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் சம்பவம் உண்மை என தெரியவந்து எதிரிகள் மீது 294(b), 323, 506(2) –ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1 வது எதிரி : பொய் வழக்கு<br>2 வது எதிரி : பொய் வழக்கு |
| 6 | கேள்வி | : | வழக்கு பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்? |
| | பதில் | : | 1 வது எதிரி : பொய் வழக்கு<br>2 வது எதிரி : பொய் வழக்கு |
| 7 | கேள்வி | : | உங்கள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டா? |
| | பதில் | : | 1 வது எதிரி : இல்லை<br>2 வது எதிரி : இல்லை |

கேள்விகள் என்னால் நேரடியாக எதிரிகளிடம் கேட்கப்பட்டு, அவர்கள் கூறிய பதில் என்னால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

(ஓம்/–திரு.சா.வரதராஜன்)
நீதித்துறை நடுவர், எண்.2
சாத்தூர்.

// உண்மை நகல்// P.P